


சென்னை வடக்கு மாவட்டம், ஆர்.கே.நகர் மேற்கு பகுதி கழகம் சார்பில் கோடைக்காலத்தில் மக்களின் வெப்ப தாக்கத்தை தணிக்கும் விதமாக நீர்மோர் பந்தல் திறப்பு நிகழ்ச்சி பகுதி செயலாளர் எஸ். ஜெபதாஸ்பாண்டியன் தலைமையில் ஜே.ஜே. எபினேசர் எம்.எல்.ஏ, முன்னிலையில் டாக்டர் கலாநிதி வீராசாமி பங்கேற்பில் மாவட்ட கழக பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, திறந்து வைத்தார். மாஸ் டி.வெங்கடேசன், எம்.கோவிந்தராஜ், எம்.லோகநாதன், டி.திராவிடசெல்வி, பி.சீனிவாசன், ஆகியோர் வரவேற்றனர். என்.மருதுகணேஷ், ஏ.டி.மணி, எம்.விமலா, நேதாஜி யு.கணேசன், எஸ்.எல். சுந்தர், கி. தேவன், ஆர்.ஏ.எம்.சசிகுமார், ஜி.ஏழுமலை, எம்.பி.ஆர்.ராஜன், மாவட்ட துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட பிரதிநிதி, பகுதி அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்ட கழக நிர்வாகிகள், இளைஞர் அணியினர், மகளிர் அணியினர், பாக முகவர்கள், சார்பு மன்ற நிர்வாகிகள், பாக பணியாளர்கள், கழக மூத்த முன்னோடிகள் என அனைத்து கழகத்தினரும் திரளாக கலந்துகொண்டனர்.

# அறந்தாங்கியில் வளர்ச்சித் திட்டப் பணிகள்!

புதுக்கோட்டை, மே 4-

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், பல்வேறு புதிய வளர்ச்சி திட்டப்பணிகளை,பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் 01.05.2025 அன்று அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார்.

பின்னர் அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கிராமப்புறங்களில் வாழும் பொதுமக்களின் பொருளாதாரத்தினை மேம்படுத்திடும் வகையில் பல்வேறு வளர்ச்சி திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் கிராமப்புறங்களுக்கு குடிநீர் வசதி, மின் வசதி, சாலை வசதி உள்ளிட்ட பல்வேறு அடிப்படை வசதிகள் நிறைவேற்றப்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில் அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், பல்வேறு புதிய வளர்ச்சி திட்டப் பணிகள் அடிக்கல் நாட்டி துவக்கி வைக்கப்பட்டது.

அதன்படி, அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியத்தில், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின்கீழ், கொடிவயல் ஊராட்சியில் ரூ.43.13 லட்சம் மதிப்பீட்டிலும், விஜயபுரம் ஊராட்சியில் ரூ.41.20 லட்சம் மதிப்பீட்டிலும், பரவாக் கோட்டை ஊராட்சியில் ரூ.40 லட்சம் மதிப்பீட்டிலும் புதிதாகக் கட்டப்படவுள்ள பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை அடிக்கல்நாட்டி துவக்கி வைக்கப்பட்டது. இப்பணிகள் அனைத்தையும் தொடர்புடைய அரசு அலுவலர்கள் தரமாகவும், விரைவாகவும் முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர அறிவுறுத்தப்பட்டது.

எனவே தமிழக அரசின் மூலம் பொதுமக்களின் நலம் காக்கும் வகையில் செயல்படுத்தப்படும் இதுபோன்ற நலத்திட்டங்களை அனைவரும் உரிய முறையில் பெற்று பயனடைய வேண்டும் எனவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் தெரிவித்தார்.

## காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட

# தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம்!

### மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.முக. அவசர செயற்குழுக் கூட்டம், நாளை 05.05.2025 திங்கட்கிழமை மாலை 4.00 மணியளவில் கருங்குழி முகுந்தன் மகாலில் மாவட்ட கழக அவைத்தலைவர் ச. இனியரசு, தலைமையிலும் மாவட்ட துணை செயலாளர்கள் டி.வி.கோகுலகண்ணனி, க.செல்வம் எம்.பி., கு.மலர்விழி, மாவட்டப் பொருளாளர் சன்பிராண்ட் கே.ஆறுமுகம் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.

எனவே, இக்கூட்டத்தில் சட்ட மன்ற உறுப்பினர் தலைமைசெயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர – நகர ஒன்றிய பகுதி – பேரூர் செயலாளர்கள், மாநில, மாவட்ட, கழக அணிகளின் நிர்வாகிகள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் கழக தலைவர் அவர்கள் அறிவித்த அறிவிப்பு சம்மந்தமாக, கழக ஆக்கப்பணிகள்.

**க.சுந்தர் எம்.எல்.ஏ.**

செயலாளர், காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க.

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# அன்னம் தரும் அமுதகரம் 73வது நாள்!

### அம்பத்தூர் கிழக்குப் பகுதியில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!





சென்னை, மே. 4-

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு, வெவ்வேறு இடங்களில் அன்னம் தரும் அமுதகரங்கள் சிறப்புமிகு திட்டத்தின் 73வது நாள் அம்பத்தூர் கிழக்கு பகுதி - இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 73 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (03.5.2025) - அம்பத்தூர் கிழக்கு பகுதி - 1) வட்டம் 83- வட்டக்கிளை அலுவலகம், சென்னை. 2) வட்டம் 83 ஆ- தாதம் குப்பம், R.K லிங்க் சாலை, சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு அவர்கள் எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொது மக்களுக்கு காலை உணவு வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, பி.கே.மூர்த்தி.எம்.சி, எம்.டி.ஆர். நாகராஜ், டி.எஸ்.பி.ராஜகோபால் எம்.சி, டாக்டர்.ஜி சாந்தகுமாரி எம்.சி, எல்.பி. எஃப்.மோகன், டாக்டர் பூர்ணிமா எம்.சி, ரமேஷ் (எ) நீலகண்டன் எம்.சி து.ஆயிரம், ஜி.வி.நாகவள்ளி எம்.சி, கு.கிருஷ்ணமூர்த்தி அம்பத்தூர்/ கிழக்கு வடக்கு/தெற்கு/ வட்ட கழக செயலாளர்கள்: மு.சண்முகம், ஆ.சுந்தரராஜ், லோகநாதன், சு.மோகன்குமார், மு.விஜயகுமார், த.வ.லால் பி. செந்தில்.வி.ரவிந்திரன், பு.வீரா(எ) வீரராகவன், வெ.ராதாகிருஷ்ணன், த.கண்ணபிரான், எம். கமல் எம்.சி, டி.பிரகாஷ் தயாளன், சி.சீனிவாசன், எம்.ஈ.சேகர் எம்.சி, நா. நெப்போலியன், ஆர். டீக்கா, ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ். முரளி, பெரம்பூர் ஆர். ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க. பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர். கொண்டனர்.

# சென்னை மேற்கு மாவட்ட கழக ஆலோசனை கூட்டம்!

### மாவட்ட செயலாளர் நே. சிற்றரசு அறிவிப்பு!



சென்னை, மே 4-

சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு அறிக்கை வருமாறு:

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி சென்னை மேற்கு மாவட்ட கழக நிர்வாகிகள் கூட்டம் நாளை (05-05-2025 திங்கள்கிழமை) காலை 10.00 மணியளவில் மாவட்ட கழகம் அமைந்துள்ள எண்.20/32 காம்தார் நகர் முதல் தெரு, நுங்கம்பாக்கத்தில் மாவட்ட அவைத்தலைவர் து.விக்டர் தலைமையில் நடைபெறுகிறது.

ஆகவே இக்கூட்டத்திற்கு சென்னை மேற்கு மாவட்டத்திற்குபட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட நிர்வாகிகள், பகுதி செயலாளர்கள், தொகுதி பார்வையாளர்கள், மாநில நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், வட்டக் கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், ஆகிய அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்ட தீர்மானங்கள் குறித்து, கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு அறிவித்துள்ளார்.

## ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. தலைமை! கே.ஏழுமலை எம்.சி. முன்னிலை!

# தியாகராயர்நகர் கிழக்கு - மேற்கு பகுதி தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றுகிறார்!

சென்னை, மே. 04 -

சென்னை தென்மேற்கு மாவட்டம், தியாகராயர்நகர் கிழக்கு - மேற்கு பகுதி தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம் இன்று (04.05.2025 - ஞாயிற்றுக்கிழமை) காலை 10.00 மணிக்கு, தியாகராயர்நகர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் நடைபெறுகிறது.

தியாகராயர்நகர் சட்டமன்ற உறுப்பினர், கிழக்கு பகுதி செயலாளர் ஜெ.கருணாநிதி தலைமையில், தியாகராயர்நகர் மேற்கு பகுதிச் செயலாளர் கே.ஏழுமலை எம்.சி. முன்னிலையில் சென்னை தென்மேற்கு மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. வாழ்த்துரையில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்ச்சியில் கோ.சு. மணி, எஸ்.மோகன், மாம்பலம் ஆ.சந்திரசேகர், மு. சத்யா, எம்.ஆறுமுகம், ஜெ.ஜானகிராமன், ஜி.டி. அம்பேத்கர், மு.ம.செந்தில்குமார், எம். கிருஷ்ணமூர்த்தி, ஆர்.சக்திவேல், ஜி.பி.செந்தில்குமரன், எம்.எஸ்.பழனி, மு.செல்வகுமார், என். துரை, எஸ்.லட்சுமிகாந்தன், டி.கமலஹாசன், தட்சன் ஹரிஹரன், ந. மோ.முரளி, கே.எஸ். வெல்டிங்ராஜா, பி.ஜெயகுமார், பி.மாரி, மு.மணிவண்ணன், இரா.பொன்னிவளவன், வி.பி.எஸ். ஜெனார்த்தா, எஸ். புஷ்பா, ஜி.மோகன்ராஜ், என்.இராமகிருஷ்ணன், பாபா சுரேஷ், ச.சந்திரசேகரன், ப.சாந்தி, எஸ்.பாஸ்கர், ராஜா அன்பழகன், மோனிஷா கருணாநிதி, ஆர்.குமரன், வெங்கட்ராமன், ஜெ.எஸ்.ஆர்.ஜெகன்ராஜ், டாக்டர் எஸ்.சரவணகுமார், ச.சண்முகநாதன், என். எஸ்.பாலசுப்ரமணியம், டி.மோசஸ், எம்.பி. மாறன், ஆர்.லோகநாதன், அ.பக்ருதீன், சி.மாரி, அ.ஆனந்தன், ம.அ.நூர் அகமத், ம.கி.தோழப்பன், எஸ்.மோகன்ராஜ், இரா. செந்தில்,ஆ.வெங்கடேசன் எஸ்.ராமலிங்கம், ஜெ.சீனிவாசன், கே.சரவணன், ஆர்.கே.முருகேஷ், சி.ஷங்கர், கே.கே.செந்தில், எச். பலராமன், சாலி கே. மோகன், எஸ்.கண்ணதாசன், இரா.மூர்த்தி, கே.சரவணன், ஆர்.கே.முருகேஷ், சி.ஷங்கர், கே.கே. செந்தில், எச்.பலராமன் சாலி கே.மோகன், எஸ். கண்ணதாசன், இரா. மூர்த்தி, சீனிவாசன், என். டி.ஆர்.வேலு, த.ராஜசேகரன், தனசேகரன், இளநீர் சுரேஷ் மற்றும் மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள், அனைத்து அணிகளின் பகுதி, வட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்ட கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

பொருள்:- தியாகராயர் நகர் உஸ்மான் சாலையில் புதிதாக கட்டப்பட்டுள்ள மேம்பாலத்திற்கு மறைந்த மாவீரன் தீரர்.ஜெ.அன்பழகன் அவர்களது பெயரை சூட்ட உத்தரவிட்ட கழக தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் செயலாளர் அவர்களுக்கும் நன்றி தெரிவிக்கும் கூட்டம்.

## நவீன் ஆர். பன்னீர்செல்வம்–கோவலன் எஸ்.பி.விஜயன் முன்னிலை! கே.எம்.சிராஜூதீன் தலைமை!

# கோவலன் கலை மன்றம் சார்பில் முதல்வர் பிறந்தநாள் விழா-நலத்திட்ட உதவிகள்!

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழங்குகிறார்! டி.கே.எஸ்.இளங்கோவன்–பூச்சி முருகன் முன்னணியினர் பங்கேற்பு!

சென்னை, மே 4-

கோவலன் கலை மன்றம் மற்றும் நவீன் பைன் ஆர்ட்ஸ் இணைந்து நடத்தும் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று (4.5.2025-ஞாயிற்றுக்கிழமை) மாலை 7 மணிக்கு., சென்னை இராஜா அண்ணாமலை மன்றத்தில் நடைபெறுகின்றது.

நிகழ்ச்சிக்கு கே.எம். சிராஜூதீன் தலைமை வகிக்கிறார். எஸ்.முரளி, எஸ். ராஜசேகர், ஐ.சி.எப். வ.முரளிதரன், எம்.ஜி. செல்வம், ஐ.பி.அப்துல்மாலிக், எஸ்.பி.விஜய், ஐ.சி. எப். கே.பழனி, டி.தேவராஜ், வி.தங்கமணி, எம். கஜேந்திரன், ஆர்.வாசுதேவன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இவ்விழாவில் மாவட்டக் கழகச் செயலாளர்- அமைச்சர் பி.கே.சேகர்பாபு கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்பிக்கிறார்.

மேலும் கழக செய்தித் தொடர்புத் தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவர் பூச்சி எஸ்.முருகன், மேயர் பிரியா ராஜன், இறையன்பன் குத்தூஸ், ஜே.ஜே.எபினேசர், ஜெ. கருணாநிதி எம்.எல்.ஏ.,

தா.இளையஅருணா, கே.சந்துரு, சி. மகேஷ்குமார், ஜி.எம்.தேவன், எம். தீனதயாளன், இளைய கட்டபொம்மன், வானவில் விஜய், வழக்கறிஞர் நா.துலுக்காணம், எம். அசோக்குமார்,

எம்.ஜி.எஸ்.செந்தில்குமார், சொ.பழனி, பெரம்பூர் ஆர்.ராஜன், தமிழன் தி.மு.காமராஜ், வெ.கிஷோர்குமார், டாக்டர் எம்.பிரசன்னா ரமணன், டி.சதீஷ்குமார், வே.பா.பிரபாகரன், எஸ். தனசேகர், பா.அன்பரசு, டி.சந்திரசேகர், ஏ.பி.ஆதவன் மணி, எம்.ஜெ.சி. பாபு, டி.வெங்கடேசன், சி.ஸ்ரீதணி, எம்.தாவூத்பீ, யோகப்பிரியா தனசேகர், அமுதாபொன்னிவளவன், எஸ்.நசீர் உசேன், ஆர். ராஜன், இரா.தயாளன், எம்.சத்தியா, அத்தோமுனுசாமி, எஸ்.குபேரன், டாக்டர் கே.நவோஜி, லயன் எஸ்.ராஜா, ராயல் டாக்டர் சுந்தரமூர்த்தி, டாக்டர் வி.எஸ். நாராயணா, நடிகர் கமலேஷ், நடிகை கிருத்திகா, நடிகர் சிவன் சீனுவாசன், நடிகை தாரணி, நடிகை வாசவி, டார்கடர் ஜி.ஆர்.வாரஹி பிரகாஷ், டாக்டர் ஏ. ரேஷ்மா பர்வீன், ஜெ.டிக்ருஸ், டாக்டர் செல்வகுமாரிரமேஷ், ஜெ.இ.பாபு, டார்டர் எஸ்.சுமதி சீனிவாசன், வி.இஸ்ரவேல் பிரபாகரன், டாக்டர் எம்.தக்காளிதங்கராஜ், கலாராணி மாரிமுத்து, சார்லஸ் ரவி, சி.முருகேசன், டாக்டர் அப்லுக் சி.சண்முகம், ஆர். டி.பாஸ்கர், ஆர்.லட்சுமி நரசிம்மன், ஆர்.வெங்கடேஷ், எஸ்.காந்த், எ. காஜாமொய்தீன், பி.பாலமுருகன் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை நவீன் ஆர். பன்னீர்செல்வம், கோவலன் எஸ்.பி.விஜயன், ஐ.சி. எப். பழனி, எம். புகழ்முருகன், பி.கண்ணன், வி.ஜெயரத்தினம், எம்.பீர்முகம்மது, புறையூர் எஸ்.ரஹீம் ஆகியோர் செய்துள்ளனர்.



வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியம், அயப்பாக்கம் ஊராட்சியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய பகுதியில் பல வருடங்களாக கிடைக்கபெறாமல் இருந்த வீட்டுமனை பட்டா சுமார் 500 பேருக்கு இல்லம் தேடி கட்டணமில்லா மனை பட்டாக்களை வீடு தோறும் ஆவடி வட்டாட்சியர் எஸ்.உதயம், அரசு அலுவலர்கள் என்.ராஜேந்திரன், ஜி.ரவி, ஜி.வசந்தகுமார், கே.பாக்யலட்சுமி, டி.பெருமாள், ஜி.ஸ்ரீதர் ஆகியோர் முன்னிலையில் மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி வழங்கினார். இந்நிகழ்ச்சி எம்.கே.எஸ்.அகாடமியின் நிறுவனரும், ஒன்றியக் கழகச் செயலாளர் அயப்பாக்கம் அ.ம.துரை வீரமணி ஏற்பாட்டில் சிறப்பாக நடைபெற்றது.

## அ.ம.துரைவீரமணி நிகழ்ச்சி ஏற்பாட்டில் வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியம் –

# அயப்பாக்கம் ஊராட்சியில் இல்லம் தேடி கட்டணமில்லா பட்டா வழங்கும் நிகழ்ச்சி!

### பட்டாக்களை – காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. வழங்கினார்!

திருவள்ளூர், மே. 04 -

திருவள்ளூர் மாவட்டம், வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியம், அயப்பாக்கம் முதல் நிலை ஊராட்சியில் இல்லம் தேடி கட்டணமில்லா பட்டா வழங்கும் நிகழ்ச்சி வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை மூலம் 18.04.2025 அன்று நடைபெற்ற அரசு விழாவில் தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் தொடங்கி வைத்த அரசு பட்டா வழங்கும் நிகழ்ச்சியின் தொடர்ச்சியாக மற்றும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படியும், அயப்பாக்கம் ஊராட்சியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய பகுதியில் பல வருடங்களாக கிடைக்கபெறாமல் இருந்த வீட்டுமனை பட்டா சுமார் 500 பேருக்கு இல்லம் தேடி கட்டணமில்லா மனை பட்டாக்களை வீடு தோறும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் ஆவடி வட்டாட்சியர் எஸ்.உதயம், வட்டார வளர்ச்சி அலுவலர் என்.ராஜேந்திரன், மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் ஜி.ரவி, வருவாய் ஆய்வாளர் ஜி.வசந்தகுமார், கிராம நிர்வாக அலுவலர் கே.பாக்யலட்சுமி, கிராம உதவியாளர் டி.பெருமாள், ஊராட்சி செயலாளர் ஜி.ஸ்ரீதர் ஆகியோர் முன்னிலையில் மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவரும், எம்.கே.எஸ். அகாடமியின்நிறுவனரும், ஒன்றியக் கழகச் செயலாளர் அயப்பாக்கம் அ.ம.துரை வீரமணி ஏற்பாட்டில் இல்லம் தேடி கட்டணமில்லா வீட்டு மனை பட்டா வழங்கும் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.





சென்னை வடகிழக்கு மாவட்டம் சோழவரம் தெற்கு ஒன்றிய இளைஞர் அணி சார்பில் இளைஞர் அணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு சோழவரம் சி.எஸ்.கே நடத்தும் மாபெரும் கிரிக்கெட் போட்டி மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ அறிவுறுத்தலின்படி சோழவரம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் மி.வே.கருணாகரன் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.டி மதன்குமார் முன்னிலையில் சோழவரம் தெற்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் எம்.ஜெகன் ஏற்பாட்டில் நடைபெற்ற இப்போட்டியில் வென்ற அணியினருக்கு பரிசுகளை வழங்கினர் முதல் வெற்றி பெற்ற அணி கெவின் ஸ்போர்ட்ஸ் 25000 ரூபாய் இரண்டாம் அணி கே பி ஸ்டார் 20000 மூன்றாம் கே எப் சி 15000 இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிருப்பித்தினார்கள் ந. பரசுராமன் முன்னாள் கவுன்சிலர் சுகவேணி, முருகன், எஸ்.பி குமார், ஆர் சிவா, வி.டிசைன்ராஜ், பி.வி எத்திராஜ், கே.வி தியாகராஜன், திருமலை, எஸ். வி.என்.பிரதீப், பி.செல்வராஜ், மதன், கே.சுதாகர், எஸ்.வெங்கட்குமார், என். விஜய், டீ.எம்.கிருஷ்ணன், வி. பிரேம்குமார், எஸ்.பி.பாண்டியன், மா. ராகுல், ஜே.பவானிசங்கர், ஏ.சூரி, டி.தினேஷ், எஸ்.சஞ்சய் மற்றும் மாவட்டம் ஒன்றியம் கிளைக் கழக நிர்வாகிகள் மற்றும் இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.